சிவமயம்

REGISTERED AS A
NEWS PAPER IN
CEYLON
P. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு மாசி மீ கஉ உ (1948 பிப்ரவரி 24 செவ்வாய்க்கிழமை) [லெ அஅ

## சமயம்

### சமயத்தின் பழமை

மனிதன் நினைக்கும் ஆற்றலைப் படைத்தவன். அவன் தோன்றின காலம் முதற்கொண்டே பலவாறு நினைத்து நினைத்துப் பல கருத்துக்களை நிண்ணயப் படுத்திக்கொண்டான் இவ்வாறு நிண்ணயம் செய்துகொண்ட கருத்துக்களிலே சமயம் என்பது ஒன்று. தனக்கு ஒரு முதல் நிலை, இடைநிலை, இறுதிநிலை என்ற மூவகை நிலைகள் உண்டு என்றும், அந்நிலைகளில் தனக்கும் ஏனைய பொருள்களுக்கும் ஒருவகைஉறவு உண்டு என்றும், பலவாறு ஆராய்ந்து சில முடிபுகளுக்கு வந்திருக்கிறான். இம் முடிபுகளைப் பல ஆய்ந்த அறிஞர்கள் எழுதியும் வைத்திருக்கிறார்கள்; பின் வந்தவர்கள் அம்முடிபுகளை மேன் மேலும் ஆராய்ந்து உறுதி செய்தும் இருக்கிறார்கள். ஆனல் சிலபேர் அம் முடிபுகளை ஐயுற்று எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள், போற்றியும் எதிர்த்தும் வந்த இம்முடிபுகள் இது காறும் உலகில் நிலவிக்கொண்டே இருக்கின்றன. இம் முடிபுகளின் பேரால் உலக வரலாற்றில் பல நன்மைகளும் கொடுமைகளும் நடந்து வந்தும் நடந்து கொண்டும் இருக்கின்றன.

### சமயத்தினல் நன்மைகள்

சமயம் வெறும் கருத்துக்களின் தொகுதி என்ற எல்லையிலே மட்டும் நிற்கவில்லை, அறிஞர்கள் கருத்துக்களின் தொகுதி என்ற அளவிலே மட்டும்நின்று அக்கருத்துக்களை விருத்தி செய்துகொண்டு வந்தார்கள். ஆனல் பொதுமக்கள் வெறும் கருத்துக்களில் நெஞ்சை நிறுத்த இயலாதவர்களாக இருந்தார்கள். அன்னோர்களுக்குச் சாதிக்க ஒரு சாதனம் வேண்டி இருந்தது. அச்சாதனம் சடப்பொருள் அல்லது பருப்பொருளாக இருந்தால்தான் அவர்கள் கண்முன்நின்று தொழில்செய்ய முடியும், ஆகவே சமயங்களுக்கு நிலையங்கள் வேண்டியிருந்தன. அந்நிலையங்களோ வழிபடும் உருவப்பொருள், அவ்வுருவம் தங்கியிருக்கும இடம் அல்லது கட்டடம், அதனை ஆதரிக்கும் கூட்டம் அல்லது சங்கம் என்ற மூவகையாகப் பெருகின. இம்மூன்று நிலைகளினலும் சமயம் உதவிபெற்று வளர்ந்தது. அவ்வளர்ச்சி நிலை நிற்கவேண்டி அறியாதவனுக்கு அறிந்தவன் அறிவுறுத்தவேண்டி வந்தது. அவ்விதம் அறிவுறுத்தலினல் படிப்பு நிலையங்கள், படிப்புத்தொழில், ஆராய்ச்சி, இவைகள் தோன்றின. இவைகளால் மக்களுக்கு மிகுந்த நன்மைகள் கிடைத்தன.

### சமயத்தினல் தீமைகள்

எல்லாரும் ஒரே விதமான அறிவு படைத்தவர்கள் அல்ல, சிலர் மிகுதியாகவும் சிலர் குறைவாகவும் அறிவு படைத்திருக்கிறார்கள். ஆகவே சமய அறிவிலும் சிலர் மிகுதியாகவும் சிலர் குறைவாகவும் வளர்ச்சி அடைகிறார்கள் ஆகவே வேறுபாடுகள்தோன்றுவது இயற்கை. மனிதனுக்குநினைக்கும் ஆற்றல் ஒன்றுமட்டும் அல்ல, உணரும் ஆற்றலும் உண்டு. உணர்ச்சி நல்லதாகவும் தீயதாகவும் இருக்கலாம். அடங்கிக் கொள்ளல், பொறுமைப்படல் முதலியன நன்மைதரும் உணர்ச்சிகள். அழுக்காறு; பொறுமை; வெகுளி முதலியன தீமை தருபவை சமயத்தில் ஈடுபட்டவர்கள் ஏனையோர் தம்மிலும் வேறு கருத்துக்களை மேற்கொண்டிருந்தால் அன்னோர்களுடன் ஒத்துழைத்து நட்பு பூண்டு பொருள்களை விரித்துக்கூறி, தாமும் அவ்வழியில் வளர்ச்சிபெறலாம் பிறர்க்கும் தம் அறிவைப் புகட்டலாம். ஆனல் பலபேர்கள் அவ்விதக் கண்ணியமான கொள்கைகளைக் கொள்வதில்லை, தம்மைக் காட்டிலும் கருத்திலும் நம்பிக்கையிலும் செயல்களிலும் மாறுபட்டிருந்தால், தமது கொள்கைகளே சரியென்றும் பிறருடைய கொள்கைகள் முற்றும் தவறு என்றும் பிடிவாதமாகக் கொண்டு மற்றவர்களை வெறுத்தும் பகைத்தும் அடித்தும் துன்புறுத்துவார்கள். தமது கொள்கைகளைத் தழுவாவிட்டால் அவர்களைத் தொலைக்கவும் முயலுவார்கள். சமயச் சார்பில் நடந்த இவ்விதக் கொடுமைகள் அளவிறந்தன. மிகவும் சாந்தமயமான சமயமாகிய கிறிஸ்தவ சமயத்தில் நடுக்காலத்தில் நடந்த கொடுமைகளுக்குக் கொலைகளுக்கும் எல்லை உண்டா, கிறிஸ்துவின் போதனைக்கும் அவரது சமயம் என்று எண்ணிக்கொண்டு அவர் பெருட்டு அதனைப் பிரசாரம் செய்வதாக வெளியிட்ட இத்தாலியப் பாதிரிமார்களின் இரத்த வெறிக்கும் அணுவளவேனும் ஒப்புதல் உண்டோ? மிகுந்த சீல சமயமாகிய புத்த சமயத்திலும் தீங்கு எண்ணு சமயமாகிய சமணசமயத்திலும், சீன, சீயம், இலங்கை பல்லவம் இப்போதைய திபெத்து முதலியவைகளில் என்னஎன்ன கொடிய செயல்கள் நடைபெற்றன இனி இஸ்லாமிய சமயத்தைக் குறித்துக் கூற வேண்டியதேயில்லை வட நாட்டில் கஜினி மாமூதும் அவனுக்குப் பின் தோன்றியவர்களும் நடத்திய கொலைகளும் முரூரச் செயல்களும் இப்போது பாகிஸ்தானத்தில் மதத்தின் பேரால் நடக்கும கொடூரங்களும் இஸ்லாம் என்ற பெயருக்கு அடுக்குமா? இஸ்லாம என்றால்சமாதானம் அமைதி என்ற பொருளல்லவா வுண்டு முகம்மதுவும் அதே கொள்கையைக் கொண்டிருந்தார் என்று தற்கால முஸ்லிம் அன்பர்கள் ஊக்கக் கூவுதலின் பயன் என்ன? உள்ளொன்று கிடக்கப் புறம்பொன்று பேசுதல் அது ஆகாதோ?

### சைவத்தின் மூலத்தானம்*

(இதுவரை எழுதின கருத்துக்கள் அரசியல் வாசனை அடிக்கின்றனவே, அவைகளை இந்தத் தாளில் எழுதலாமா என்று நேயர்கள் எண்ணலாம். அது முன்னுரைதான். பொருள் இனி வருகின்றது.) பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி சமயம் உலகில் தோன்றியபோது உருவ வழிபாடும் தோன்றியது. அப்போது மக்களுடைய கருத்துப் போக்கை ஒட்டியே உருவங்களும் தோன்றின அப்போது தோன்றினவைகளுள் ... வங்க ... முதலியவைகள் ... பின்பற்றியவையே. நமது நாட்டிற்கு அடுத்துள்ள இலங்கை, சீயம், சீன முதலியவைகள் மட்டுமல்ல, மேற்கே உள்ள சுமேரியா, மெசபொடேமியா அரபியா, மிசிரம் (எகிப்து), யவனம் முதலிய நாடுகளிலும் இலிங்கக் குறிகளே வழிபாட்டு உருவங்களாக இருந்தன. மேலும் வெகு தொலைவான நாடுகளான ஆப்ரிக்காக் கண்டம் பெருங்கடல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்காவில் மாயா, மெக்சிகோ, பெரு முதலிய பிரதேசங்களிலும் இலிங்க உபாசனைதான் இருந்ததாம. இந்தக் கருத்தை விவரமாகத் திரு. கந்தையா அவர்கள் தமது "சிவன்" என்ற நூலில் எழுதியிருக்கிறார்கள். நமது நாட்டிலும 5000 ஆண்டுகளுக்கு முந்தி இமயம்முதல் குமரிவரை சைவமே யிருந்தது, உபாசனையும் இலிங்கத்திற்கே இருந்தது என்று சிந்து ... தைக் காட்டும் புதையல் ... தெரிகின்றது என்று அந்நூல் தெளிவாகக் கூறுகின்றது. ஆகவே சைவம் சிந்துநதி தீரத்தில் பழமையாக இருந்தது என்பது தெளிவு. அங்கே சைவம் இருக்கக்கூடாதா?

சிந்துநதி தீரத்துப்புதையல்களிலே (மகஞ்சதாரோ ஹாரப்பா) பல பண்டைப் பொருள்களிலே சிவலிங்க வடிவம் சிறந்து விளங்குகிறது. நந்தியின் வழிபாடு மிகுந்திருந்தது. இவைகள் எல்லாவற்றினலும் அந்தப் பள்ளத்தாக்கே சைவத்திற்குமூலஸ்தானம்என அறியவேண்டும். இத்தனைப் பழமை கொண்ட சின்னங்கள் பிற இடங்களில் இதுவரை காணவில்லை. ஆகவே சிந்துநதிப் பள்ளத்தாக்கே சைவ சமயத்திற்கு முதலுரிமை என்று கூற

தொடர்ச்சி 4 ம் பக்கம்

* தற்கால மூல்தான என்பது மூலத்தானம் என்பதன மருவு அங்கே மூலத்தானேசுவரர் கோயில் ஒன்று இருந்ததாம். இது சிந்துப்பள்ளத்தாக்கில் உள்ளது.

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பொன்னியங் கிலங்கோளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றை ம் படியினய் கூடலாள வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.
—சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## காந்தீயத்தை வளர்க்க

### தீவுப்பகுதி மக்கள் முயற்சி

காந்தியடிகளாரின் பூதவுடல் நீறு புண்ணிய தீர்த்தங்களிற் சேர்க்கப் பெற்ற புனிதநாள் 12-2-48வியாழன். அன்று காலை 10 மணியளவில் வேலணை அரசினர் மகாவித்தியாலய கலாசாலையில் அடிகளாரின் நினைவு குறித்து இப்பகுதி மக்கள் செய்யவேண்டியனபற்றிச் சிந்தித்து முடிவு செய்வதற்குக் கூடிய கூட்டம் திரு. வ. சவிரிமுத்து அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. அப்புனித நாளில் காந்தி சேவாசங்கத்தின் கால்கோள் நிகழுதல் பொருத்தமாயிருக்குமென்னுஞ் சிந்தனை முதல்நாள்தானே சிலருள்ளத் துதித்தமையால், எல்லாத் தீவு மக்களுக்கும் கூட்டம் கூடுவதுபற்றிக் காலத்தோடு அறிவிக்கவசதிவாய்க்கவில்லை; ஆயினும் பல்வேறு கிராமங்களிலிருந்தும் ஆர்வமுள்ள பலர் சமுகமளித்துத் தத்தமக்குத் தோன்றிய நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்லி ஆதரித்தனர். முடிவாகப் பின்வரும் ஆலோசனைகள் இரண்டும் எல்லாராலும் உவந் தேற்றுக்கொள்ளப்பட்டன.

1. அடிகளார் தீவுப்பகுதி மக்களுக்குத் தரிசனமளித்து, உலகை உய்விக்க வல்ல — என்றும் பொன்றாத தமது உயர்ந்த கொள்கைகளை உபதேசித்தருளிய ஊர்காவற்றுறை 'ஆஸ்பத்திரி'க்கு முன்னேயுள்ள மைதானத்தைப் புனித ஸ்தலமாக்குதல்.

(அ) அப் புற்றரையைப் பூங்காவாக்கல்.

(ஆ) சிலையொன்றமைத்தல்.

(இ) சிறிய ஆச்சிரம மொன்றினை நிருமித்தல்.

2. சமூகசேவை

(அ) ஹரிஜனச் சிறுவர் சிலரைத் தென்னாட்டிலுள்ள ஆசிரமங்களுக்கனுப்பிக் கிராம நிர்மாண சேவையிலவரைப் பயிற்றுவித்தல்.

(ஆ) ஹரிஜனரைப் பொதுநிலையங்களெவற்றிலும் அனுமதிக்கமுயலுதல்

(இ) மதுவரக்கனை ஒழிக்க முயலுதல். இன்ன பிறவும்.

திரு. மா. சிவராஜாவை அழைப்பாளராகக் கொண்ட நிருவாகசபையொன்று தெரிவு செய்யப்பட்டது. இன்னும் சேர்க்கவேண்டியவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் இச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 16-2-48 திங்கள் மாலை 4 மணியளவில் காம்பன் சிவகுருநாத வித்தியாசாலையில் நிருவாகசபைக் கூட்டம் ஆரம்பமாயது. அயற்றீவுமக்களும் சமுகமளித்தனர், முந்திய கூட்ட ஆலோசனைகள் நன்கு தர்க்கித்துத் தெளிந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன.மேற்காட்டிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் பூரண அதிகாரத்தொடுகூடிய காரிய நிருவாகசபை ஒன்றமைக்கப்பட்டது. சமூக சேவையென்னும் இரண்டாவது நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு அதற்கெனவோர்உபசபை அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
மாசி மீ கஉ௳ செவ்வாய்க்கிழமை

## "என்கடன் பணிசெய்து கிடப்பதே"

II

அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல்லெனச் சொல்லப்படும் இந்த நான்கனுள் ஒன்று மாத்திரமே ஒருவன் செய்யும் அறத்தைக் கெடுத்து, செய்யுமவனைக் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசியவனுடைய நிலைமையி லாக்கிவிடும்; ஆனதாற்றான் இறைவனருள் வழிநின்று பணியாற்றவேண்டுமென்கின்றேம்; பணியாற்றுதற்கு முந்தியே, அப்பணியாற்றுவோன் தன்னையும் தன் பணியனைத்தையும் இறைவனிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்; அப்பர் சுவாமிகளும் இப்படியே முதல் தம்மை இறைவனிடம் ஒப்புவிக்கின்றார்; எங்ஙனம்?"....திருக்கரக்கோயிலான் தன்கடன் அடியேனையுந் தாங்குதல் ......" என்ற திருவாக்கினாலே, தம்மைத் தாங்குதல் இறைவன் கடனாகும், இறைவனாலே தாங்கப்படும் இவருடையபணியும் இறைவனருளை மேற்கொண்டு செய்யப்படும் பணியாகின்றதல்லவா!

மேலும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் போன்றசிவாநுபூதிமான்களும் சிவப் பணியைச் செய்தற்குத் திருவருளையாசித்து நிற்கின்றார்களென்று நாங்கள் பெரியபுராணத்திற் படிக்கின்றேமல்லவா! பாண்டியநாடு முழுவதையும் அக்காலத்தில் மூடிக்கிடந்த சமணசமயத்தை ஒழித்துச் சைவசமய ஒளியைப் பரவச்செய்தலாகிய பெரிய சிவத்தொண்டினைச் செய்யத் திருவுளங்கொண்ட ஆளுடைய பிள்ளையார், தாம் அப் பெருந்தொண்டினைச் செய்தற்கு ஆலவாய்ப்பெருமானுடையதிருவுளச் சம்மதத்தை (ப்பின்வருமாறு) வேண்டுகின்றார்:—

'ஆலமே யமுத மாக வுண்டு
வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டர்க் காக்
காய்ந்தனை அடியேற்கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டும்
நான்மறைக ளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானே.'
என்றார்.

பரமசிவனுடைய அருமைத் திருக்குமாரரெனப் பாராட்டப்படுபவர், பெரியநாயகி யம்மையார் ஞானப்பாலூட்ட உண்டு மூன்றும் வயசிலே தமிழ்வேதமாகிய தேவாரத்தைப் பாடியருளிய பெருமானார் இப்படிச் சிவப்பணி செய்தற்குச் சிவத்தை இரந்து நின்றாரென்றால், சின்னட்பல்பிணிச் சிற்றறிவினராகிய எம்போல்வார் திருவருட் சம்மதமின்றித் தொன்மையை மாற்றலா மென்றும் நினைத்தபடி கருமமாற்றலா மென்றும் நினைத்து முனைந்து நிற்பது கடைத்தேறுதற்கான செயலாகுமா?

இனி, அன்பர்பணி செய்வதற்குத் தம்மை ஆளாக்கி வைக்க வேண்டுமென்று பரமபதியை இரக்கின்றார் தாயுமானவர்:—

"அன்பர்பணி செய்யவெனை
ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்
தெய்தும் பராபரமே"

இதனால் இறைவனுடைய அருளை வேண்டியிரந்து நின்று பெற்று அடியார்பணி முதலிய திருத்தொண்டுகளைச் செய்தலே முறையாகு மென்பதும், அங்ஙனஞ் செய்தாற்றான், அத் தூய பணிகள் இனிது நிறைவேறி எவர்க்கும் நன்மை பயக்குமென்பதும் பெறப்படுகின்றன வல்லவா; இறைவனுடைய அருள் வேண்டியதில்லை யென்றும், இறைவனுடைய அருளொன்றில்லையென்றும் கருமஞ் செய்யத் தொடங்கி அக்கருமங்கள் நிறைவேறாது பங்கப்பட்டொழிய, அவற்றோடு தாமு மாண்டவர்கள் முறையே தக்கனும் தாருகாவனத்து முனிவருமாவர்.

சைவ நன்மக்களாகிய நாங்கள் அற்ப கருமத்தைத்தானும், நாள்தோறுஞ் செய்யுங் கருமங்களைத்தானும் செய்யும்போதும் இறைவனது திருவருளை முன்னிட்டே செய்து வரலானோம்; சைவமக்கள் தமிழிலே கடிதம் எழுதும்போது ஒரு பிள்ளையார்சுழி (௨) இட்டுச் "சிவமயம்" என வரைந்தபின்பே கடிதத்தைத் தொடங்குவர். பிள்ளையார்சுழி யிடுவதன் காரணம் வெளிப்படை. மற்றச் சிவமயம் என்பதற்கு எல்லாம் சிவத்தாலாகிய நிறைவு, சிவ்வடிவம் என்பனவல்லவா முன்னோர்கொண்ட பொருள். இப்படி அற்ப கருமங்களைத் தாமும் சிவனருள்வழி நின்று செய்யும் சைவமக்களாகிய நாம், தொன்மையானவை, ஆன்றோரால் அங்கீகரிக்கப்பட்டு வந்தவையான மேலான கொள்கைகளை எங்கள் மனம் போனவாறு விபரீதப்படுத்தவும், தவிர்க்கவும் இறைவனுடைய அருளை வேண்டிநிற்றலே முறையென்பது துணிபாகும்.

# பாரதூரமான குற்றச்சாட்டுக்கள்

## லஞ்சமும், பட்சபாதக முறையும்

### நகரசபைத் தலைவர்மீது அதிருப்தி

கடந்த 4 வருஷ காலமாக, யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் தம் பதவியில் இருந்துகொண்டு செய்த நீதியற்ற கருமங்களைச் சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த கூட்டத்தில், திரு கே. வீ. சின்னத்துரையும், திரு சாம் சபாபதியும் அடுக்கடுக்காக எடுத்துரைத்தனர். நகரசபை நிர்வாகத்தில் லஞ்சப்பேய் புகுந்துவிட்டதென்றும், தலைவர் தமது பரிபாலன விஷயத்தில் பட்சபாதகமாக நடந்தார் என்றும் இவர்கள் குற்றம் சாட்டினர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரு, கே. வீ. சின்னத்துரை எடுக்கும்போது கையிற் பின் வருமாறு குறிப்பிட்டார்.

"என்னைப் பொறுத்தமட்டில் இவ்வகையான தீர்மானத்தைக்கொண்டு வருவது எனக்கு மிகுந்ததுக்கத்தைக் கொடுக்கின்றது. ஆயின் ஏழைகளாகிய வரியிறுப்போர்களுக்கு நீதி செலுத்தப்படல்வேண்டும். அதையிட்டே நான் பயமின்றியும் பட்சபாதகமின்றியும் இத்தீர்மானத்தை சபையில்பிரேரிக்கின்றேன். நாங்களே உம்மைத் தலைவராகத் தெரிவு செய்தோம். அப்பொழுது நீர் எல்லா வரியிறுப்பவர்களுக்கும் சம உரிமை கொடுப்பீர் என்றே எண்ணியிருந்தோம். ஆனால் காலம் செல்லச்செல்ல உமது நிர்வாகத்தில் பலவீனம் தோற்றியது உமது கடமைகளைச் செய்யும்பொழுது பட்சபாதகமாகவும் நடக்க முற்பட்டீர் நாங்கள் நீண்டகாலமாக அவற்றைப் பொறுத்திருந்தோம் இனி எம்மால் பொறுக்கமுடியாது ஏழை வரியிறுப்பவர்களுக்கு நாங்கள் எங்கள்கடமையைச் செலுத்திக்கொள்ள வேண்டும்,

"உமக்கு அதிகாரத்தில் அதிகமான ஆசை ஏற்பட்டமையால் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க முற்பட்டுவிட்டீர். இதன்காரணமாக உமது பதவியில் அட்டைபோல ஒட்டிக்கொள்ள ஆவலுற்றிருக்கின்றீர்."

தொடர்ந்து திரு சின்னத்துரை சொல்லியதாவது: "நான் உமக்கும் இச்சபையின் அங்கத்தினர்களுக்கும் மற்றும் பொதுஜனங்களுக்கும் நீர் வரியிறுப்போருக்குச் செய்துள்ள சில விஷயங்களைச் சுட்டிக் காட்டவேண்டியிருக்கின்றது,

"முதலாவதாக உமது நிர்வாகத்திலுள்ள மின்சாரப் பகுதியைக் குறிப்பிடுகிறேன். இச்சபையால் மின்சார இப்பகுதிசம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நீர் எள்ளளவும் சட்டை செய்யவில்லை. நினைத்தபடி கருமங்கள் ஆற்றியிருக்கின்றீர், புதிதாக மின்சார விநியோகம் தேவைப்படுபவர்களுக்கு அது கொடுக்கப்படலாகாது என்று இச்சபை தீர்மானித்திருந்தது. காரணம் முன்கூட்டியே அப்படிக் கேட்டவர்கள் பலர் கொடுபடாதிருக்கின்றமையால்; மின்சார அதிகாரி இப்பொழுதுள்ளதற்கு மேலாக யந்திரங்கள் பாரம் சுமக்க முடியாதென்பதை உமக்குத் தெரிவித்திருக்கின்றார். உமக்கு வேண்டியவர்களுக்கு நீர் விநியோகம் செய்ய உத்தரவிட்டிருக்கிறீர் வடமாகாண வித்தியாதிகாரி திரு. கதிர்காமநாதன் ஒரு மாதத்திற்கு முன்பு மின்சாரவிநியோகம் தமது புதிய வீட்டிற்குக் கேட்டிருந்தார். நீர் அந்த மனுவை மறுத்தீர் பின்பு அவர் புறக்டர் காரசிங்கத்தை உமது வீட்டிற்குக் கொண்டுவந்தார். ஆகவே நீர் அவர்களை ஏழு நாட்களுக்குத் தற்காலிக மின்சாரவிநியோகத்திற்குமனுப் பண்ணுமாறு சொல்லியிருந்தீர். நீர் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் காட்டுதல் தகாது; ஆகையால் அவருக்கு இப்படிக் கொடுக்கக்கூடாது என்று உமக்கு நான் சொன்னேன். நீர் மின்சார அதிகாரியைக் கூப்பிட்டீர், என் முகதாவிலேயே மின்சார அதிகாரி புதிய மின்சாரத் தொடர்ச்சி கொடுக்க முடியாது என்று உமக்குச் சொன்னார். ஆகவே நீர் திரு கதிர்காமநாதன் இருந்த வீட்டு மின்சார விநியோகத்தை வெட்டிவிட்டு ஏழுநாளைக்கு அவரின் புதிய வீட்டிற்கு தற்காலிக விநியோகம் செய்யுமாறு சொன்னீர் அப்படியே இவ்வுத்தரவு நிறைவேற்றப்பட்டது. ஆனால் இப்பொழுது அந்த வீட்டிற்கு நிரந்தரமான மின்சார விநியோகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

"தேசாதிபதியால் அளிக்கப்பட்ட அனுமதிப்பிரகாரம் நகரசபை எல்லைக்கு அப்பால் 15) யாருக்குள் எங்கள் மின்சாரம் விநியோகிக்கப்படலாம். நீர் நகரசபைக்கு கால்மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஒருவருக்கு மின்சார விநியோகம் செய்திருக்கின்றீர். இதை நான் உமக்கு தெரிவித்திருக்கிறேன்.

"மின்சார அதிகாரி லீவில் செல்லும்போது அவரது லீவு காலத்தில் ஒருவருக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடாதென்று உத்தரவிட்டிருந்தார். அப்படி இருக்கவும் உமது சிநேகிதன் ஒருவரைச் சந்தோஷிப்பதற்காக விநியோகம் செய்திருக்கின்றீர்.

"சபையின் வேலைப்பகுதியை எடுத்துக் கொள்வோம். நீர் பாஷையூர், கரையூர், சிவியாதெரு, கொழும்புத்துறை முதலிய இடங்களிலே உமது கவனத்தைச் செலுத்தியிருக்கின்றீர். செங்குந்தச் சந்தைக்கு ஒரு சுவர் கட்டுவதற்கு 1947-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. நீர் இன்று வரைக்கும் அதைச் செய்யவில்லை, செம்மணிறோட், ஆடியபாதமறோட் கொண்டலடி றோட் முதலியவற்றிற்குக் கல்லுப் போடுமாறு உம்மை மன்றாடினேன்; இந்த றோட்டுகள் எட்டு வருட காலங்களாகக் கல்லுப் போடப்படவில்லை. அப்படியிருந்தும் நீர் இதைச் செய்யவில்லை. நான் நெருக்கியபடியால் ஆடியபாதம் றோட்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

## அமரன் எங்கள் காந்தி

1 உண்மை தொண்டு வீரம் மூன்றும் ஊற்றெடுத்த பண்பினன்
வன்மை கொண்ட சுதந்திரத்தின் வளமை கண்ட தென்பினன்.
2 ஏழைகள் துயர் துடைத்து ஏழைகளைப் போற்றினன்
ஏழ்மையின் புகழுரைத்து ஏழ்மைக் கோலங் காட்டினன்
3 அந்நியற்கும் அரசினர்க்கும் அஞ்சிநின்ற மக்களை
"அஞ்சவேண்டாம்" என்றுகூறி ஆண்மையோ டெழுப்பினன்
4 அகிம்சை யின் நெறிபிடித்து ஆளுவோரை ஓட்டினன்
இம்சை யின்றி இந்தியாவின் இருளினை யகற்றினன்.
5 உலகினுக்கு ஒளி கொடுத்து உண்மை நெறி காட்டினன்
உலகிலுள்ள மக்களது உள்ளபீட மேறினன்
6 புத்தர் யேசு நாதரென(ப்) புவி புகழ வந்தவன்
அத்துணைப் பெயர்படைத்த அமரன் எங்கள் காந்தியே.

—"தில்லைச்சிவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் காணாத இன்பக்காட்சி

## அடிகளின் அஸ்தி சமர்ப்பணம்

### கீரிமலையில் மங்களமாக முடிந்தது

இந்த யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தில் இவ்வளவு பெருந் தொகையான ஜனங்கள் எப்போதும் கூடியதில்லை என்று சொல்லத்தக்கதாக ஆயிரக் கணக்கான மக்கள்—ஆடவர், மகளிர், பாலர்—சமுகத்தில் மகாத்மா காந்தியடிகளின் புனித அஸ்தி, சென்ற ஞாயிற்றுக்கிழமை பகல் 10½ மணியளவில், கீரிமலைப் புண்ணியதீர்த்தத்திலே, பாராளுமன்ற வட்டுக்கோட்டைப் பகுதிப் பிரதிநிதியாயுள்ள திரு. க. கனகரத்தினம் அவர்களால் கரைக்கப்பட்டது.

கீரிமலைத் தீர்த்தத்திற் சேர்க்கப்பட வேண்டிய காந்திஜீயின் புனித நீறு வெள்ளிக்கிழமை காலை வெள்ளிப்பாத்திரத்தில் இடப்பெற்று அலங்காரமான மோட்டோர் இரதத்தில் கொழும்பில் வைக்கப்பட்டது அன்று காலை எட்டரை மணிக்கு இரதம் கொழும்பு நகரை விட்டுக் கிளம்பி நீர்கொழும்பு, சிலாபம் வவுனியா போன்ற இடங்களில் மக்கள் தரிசனத்துக்காகத் தங்கி, சனிக்கிழமை மத்தியானம் கிளிநொச்சியை வந்து சேர்ந்தது, பின்னர் பளையிலே கூடி நின்ற மக்கள் தரிசனம் பெற்றதும் கொடிகாமத்தை யடைந்தது. இதன்பின்னதாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் அஸ்தியானது தரிசனத்துக்கு வைக்கப்பட்டது. கல்லூரி மண்டபம் மகரதோரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது பிரார்த்தனைகளுக்கும் ஒழுங்கு செய்யப்பெற்றிருந்தது. அஸ்தியானது கல்லூரி மண்டபத்திலிருந்து நுணாவில்வரை ஊர்வலமாக வந்தது.

சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து, அடிகளாரின் அஸ்தி அடங்கிய பேழையைக் கொண்டு வந்த மோட்டார்ரதம், அரியாலையை அடைந்ததும், "மகாத்மாகாந்திக்கு ஜே" என்ற கோஷம் வானைப்பிளந்தது. ஆண்கள், பெண்கள், பாலர், விருத்தர் வீதியின் இருமருங்கிலும் அஞ்சலி செய்த காத்தினராய் நின்றனர். "ரகுபதி ராகவ ராஜாராம" பஜனைக்கோஷ்டியினர் இடைவிடாது பாடிக்கொண்டிருந்தனர்; 5மணிக்கு மோட்டார்ரதம் அரியாலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டது. வழிநெடுக, மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இடையிடையே மகாத்மாவின் திருஉருவப்படம் மலர்மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டு, பந்தர்களில் வைக்கப்பட்டிருந்தது

பஜனைக்கோஷ்டி முன் செல்ல, அதன் பின்னர் பாராளுமன்றத்திலுள்ள யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் பின்தொடர, அடிகளின் அஸ்தி கொண்டுவந்த மோட்டார் ரதம் கச்சேரியை அடைந்ததும், அஸ்திப்பேழை ரதத்திலிருந்து எடுக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தின் பாராளுமன்றப் பிரதிநிதியான ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலத்திடம் ஒப்புவிக்கப்பட்டது திரு. பொன்னம்பலம், அஸ்திப்பெழையை இருகரங்களாலும் ஏற்று அதனைக் கொண்டுவந்தார். யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் இதற்கென ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஸ்தானத்தில், அஸ்திப்பேழை, திரு ஜீ ஜீ பொன்னம்பலத்தினால் நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலத்திடம் ஒப்புவிக்கப்பட்டது.

அஸ்திப்பேழை வைக்கப்பட்ட பின்னர் மத குரவர்கள் தத்தம் வேதபாராயணம் செய்தனர். இரவுமுழுவதும் பொது ஜனங்கள் ஆயிரக்கணக்கில் சென்று அஸ்தியைத் தரிசித்து மீண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு, இதற்கென அலங்கரிக்கப்பட்ட ரதத்தில், அஸ்திப்பேழை வைக்கப்பட்டு, நகரமண்டபத்திலிருந்து, யாழ்ப்பாணம் பெரிய கடைத்தெரு வழியாக, காங்கேசன்துறை வீதி மார்க்கமாக, கொக்குவில்வரை ஊர்வலத்தில் சென்றது. வழிநெடுக மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. ஆங்கிங்கு மலர்மாலைகள் அணியப்பட்டன. "மகாத்மாகாந்திக்கு ஜே" கோஷம் வானைப் பிளந்தது.

கொக்குவில் சந்தியிலிருந்து அஸ்தி ஊர்வலம் விரைவில் சென்றது. குறிக்கப்பட்ட பிரதான சந்திகளில் மாத்திரம் தங்கியது.

காலை 10 மணிக்கு அஸ்தி கீரிமலையை அடைந்தது அங்கே ஹிந்து முறைப்படி கிரியைகள் நிறைவேறியதும் சரியாக 10½ மணிக்கு, திரு. கனகரத்தினம் அவர்களினால் அஸ்தி புண்ணிய தீர்த்தத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

### பேராபத்து நிகழப்போகிறதாம்

வருகிற மார்ச் 20ந் திகதி ஒரு பேராபத்து நிகழ்ந்து பெருஞ்சேதம் விளையப்போகிறதென்று 114 வயதான இந்திய தீர்க்கதரிசி ஸ்ரீ அமார் சிங் கூறுகிறார், அந்தப் பேராபத்து ஒரு சூறாவளியா யிருக்குமோ அல்லது எத்தன்மையதா யிருக்குமென்பதைப்பற்றி அவர் நிச்சயமாகச் சொல்லவில்லை. ஆனாலும் அது இப்பொழுது ஆகாசத்தில் உருவாகிக் குமுறிக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார். இவர்தான் சமீபத்தில் தோன்றிய வால்நட்சத்திரத்தைப்பற்றி முன்கூட்டியே சொன்னவர்.

### இலங்கைச் சுதந்திரவிழாச் செலவு

இன்று ஜனப் பிரதிநிதிகள்சபை கூடும்போது இலங்கைச் சுதந்திர விழாக்கொண்டாட்டங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட செலவு விபரத்தைப்பற்றி அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்கப்படும் எனத் தெரிகிறது. செலவு கணக்கு விவரத்தை வெளியிடுமாறு நிதிமந்திரி கேட்கப்படலாம். கொண்டாட்டங்களின்போது அரசாங்க விருந்தாளிகள் பாவித்த மோட்டார் கார்கள் எவ்வளவு? புதிதாக வாங்கப்பட்டவைகள் எவ்வளவு? இவைகளுக்கு இறக்குமதி வரி கொடுத்தாகிவிட்டதா? புதுக் கார்களை எந்தவகையில் அரசாங்கம் விற்கப்போகிறது? என்ற கேள்விகளும் எழும்பலாம்,

### மீண்டுவிட்டார

குளேரஸ்ரர் கோமகனும் அவர் பரிவாரத்தினரும் சென்ற வெள்ளிக்கிழமை இங்கிலாந்தைச் சேர்ந்து விட்டார்கள்.

### சீனி, மா நிலைமை

சென்ற வியாழக்கிழமை பிரிட்டிஷ்மந்திரசபையைச் சேர்ந்த உதவிமந்திரி திரு. எஸ். டபிள்யூ ஹூட் இங்கு வந்து சேர்ந்தார் இங்கு அவர் 10 தினங்கள் தங்கி உணவு, வர்த்தக மந்திரிகளைக் கண்டு பேசுவார் எனத் தெரிகிறது. உணவு மந்திரியுடன் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் இந்நாட்டில் நிலவும் சீனி, மாவு நிலைமையே முக்யமாக இருக்கும் எனத் தெரிகிறது.

# பதவி ஏற்குமா?

## தமிழ்க் காங்கிரசின் நிலை

**அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் அரசியல் நிருவாகத்திற் பங்கு பற்றுமா? பதவி ஏற்குமா? இதுபற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் இப்போது கிளம்பியுள்ளன.**

### பதவி ஏற்கலாம்

கொழும்பிற் பிரசுரமாகும் 'டைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் நிருபர் சென்ற ஞாயிற்றுக்கிழமை இலங்கையிலிருந்து சோல்பெரிப் பிரபு பிரயாணமாகுமுன் அன்னவரைச் சந்தித்து இலங்கை அரசியல் நிலைமைபற்றிச் சம்பாஷித்தார். அச்சம்பாஷணைச் சுருக்கம் வருமாறு:

"எம்முடைய சம்பாஷணையின்போது இலங்கைமக்கள் அனைவரும் சாதிமத வித்தியாசமின்றி ஒற்றுமையுடன் இருந்து தேசநலத்துக்காகப் பாடுபட வேண்டுமென்று சோல்பெரிப் பிரபு கூறினர். தேச மக்களுக்கிடையே ஒற்றுமை யில்லாவிட்டால் நாசமே விளையும். ஆகவே, சிங்களர், தமிழர், இஸ்லாமிடர், பறங்கியர் என்ற பாகுபாடின்றி எல்லாரும் இலங்கையர் என்பதை ஒவ்வொருவரும் அகத்துட்கொண்டு தொண்டாற்றவேண்டும் என சோல்பெரிப் பிரபு கேட்டுக்கொண்டார். தேசிய ஒற்றுமை இருந்தால்தான் தேசம் சுபீட்சமும் பலமுமடையும் என்று அவர்கூறினர்

"மிஸ்ரர் சேனநாயக்காவின் மந்திரசபையில் தமிழ்க் காங்கிரசும் சேரும் என்று ஓரளவுக்குச் சொல்லத்தக்க உற்பாதங்கள் தெரிகின்றன என்று நான் கூறியதைக் கேட்டு சோல்பெரிப் பிரபு மிகவும் சந்தோஷமடைந்தார்.

அவர் கூறியதாவது:

"என்னுடைய சிறந்த நண்பர்களில் திரு. ஜீ. ஜீ யும் ஒருவர் அவர் இந்நாட்டின் சுபீட்சவிஷயத்திற்குமுதன்மைஸ்தானம் கொடுத்து ஆகவேண்டியனவற்றைச் செய்துவருவார் என்று நம்புகிறேன்."

"அரசியல் வட்டாரங்களுக் கிடையே தமிழ்க் காங்கிரஸ், சேனநாயக்கா மந்திர

தொடர்ச்சி 4-ம் பக்கம்.

### இப்போது இல்லை

சமது அரசியல் நிருபர் எழுதுகிறார்:

தமிழ்க்காங்கிரஸ் பதவி ஏற்பதுபற்றி வரும் கதைகள் யாவும் சுத்தப்பொய் என்று காங்கிரஸ் அதிகாரபீடத்துடன் தொடர்புகொண்டுள்ள பிரமுகர் ஒருவர் எனக்கு நேற்றைத்தினம் கூறியுள்ளார். காங்கிரஸ்வாதிகளை எப்படியாவது மந்திரசபையில் மாட்டிவிட, இப்போது மந்திரசபையில் மிகவும் பிரதான பதவிவகிக்கும் ஒருவரும், ஓர் அரசாங்க அதிகாரியும் பகிரதப் பிரயத்தனம் செய்தது உண்மை; ஆனல், அப்பிரயத்தனம் அவலமாய் முடிந்துவிட்டது என்று இப்பிரமுகர் கூறினர். மேலும் இவர் கூறியதாவது:

'காங்கிரஸ்வாதிகள் பதவிவேட்டையின் பொருட்டுப் பாராளுமன்றத்தை நாடவில்லை. விசேஷமாக தமிழ்மக்களுக்கு, மந்திரசபையில் இப்போதுள்ள நிலையில் அங்கத்துவம் வகிப்பதால் ஏதும் நன்மைசெய்யமுடியுமோ என்பது மிகவும் சந்தேகமான விஷயம். எவ்விதத்திலாவது உண்மையான சேவையைச் செய்ய முடியாது; திரு. சேனநாயக்காவின் கைப்பொம்மைகளாக இருக்க காங்கிரஸ வாதிகள் ஓர்போதும் ஒருப்படமாட்டார்கள்.

'தேசபரிபாலனத்தில் தமிழ்மக்களும் பங்குபற்றத்தான் வேண்டும். ஆனல் அதன்பொருட்டு தமிழ்மக்களின் சுயமரியாதையை விலைபேசி நாம் விற்கமாட்டோம். திரு சேனநாயக்கா உண்மையில் தமிழ்மக்களது ஒத்துழைப்பைப் பெற விரும்புவாரானால், அவர் முதலில் தமிழ்க் காங்கிரசின் பிரதிநிதித்துவ தன்மையை மதிக்கவேண்டும். எங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கவேண்டும், மந்திரசபையில் எமக்கும் நியாயமான பங்கு அளிக்கவேண்டும். இவற்றுக்கு திரு சேனநாயக்கா இணங்கினல், நிலைமையைத் தமிழ்ப் பொதுஜனங்களுக்கு விளக்கி, அவர்கள் அனுமதியுடன் மந்திர சபையிற் சேருவோம். அதற்குமுன் அல்ல. இதற்கிடையில காங்கிரஸ் சேரப்போகிறது. சேர்ந்து விட்டது என்றெல்லாம் பரவிவரும் பேச்சுக்கள்: தமிழ்க்காங்கிரசிற்குள் பிரிவினை ஏற்படுத்த சிலர் செய்யும் சூழ்ச்சிகளே என்க."

# விதானைமார் கோரிக்கை

### சம்பள உயர்வு வேண்டுமாம்!

இக்காலத்தில் தகுந்த கல்வியறிவு பெற்றவர்களையே விதானைமாராக நியமிக்கவேண்டுமென்று அரசாங்கம் நிச்சயித்து, அதன்படிக்குக் கருமம் ஆற்றிவருகிறது. ஆகவே, அப்படி நியமிக்கப்படும் விதானைமார்க்கு அவர்களின் தாரதரத்துக்கேற்ப, கூடிய வேதனம் உதவப்பட வேண்டுமன்றி இப்போதுபோல மிகவும் கேவலமான, அற்பமான சம்பளம் கொடுக்கவொண்ணு தென்று சென்றவாரம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் கூடிய யாழ்ப்பாணப் பகுதி விதானைமார் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டத்தில் பலர் பேசினர் இக்கூட்டத்திற்குச் சுன்னகம் விதானை திரு எஸ். மண்டலநாயகம் தலைமை வகித்தார்,

கிராம விதானைகட்கு அதிக சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பது நிகழ்ச்சித் திட்டத்தில் முக்கியமானதாகவிருந்தது, முன்னையிலும் பார்க்க கூடிய தகுதியுடையவர்களை கிராம விதானைகளாக நியமிக்கப்படுகையில் சம்பளத்திலும் உயர்வு இருக்க[illegible]

### திருப்தியில்லை

### நகரசபைத் தலைவரின் சேவை

கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக நகரசபைத் தலைவராகக் கடமையாற்றிய திரு. க. பொன்னம்பலத்தின் சேவையில், நகரசங்கம் அதிருப்தி தெரிவித்திருக்கிறது. சென்ற வெள்ளிக்கிழமைநிகழ்ந்த நகரசபைவிசேஷ கூட்டத் தீர்மானத்தின் சாரம் அதுதான்.

நகரசபைத் தலைவர்மீது நம்பிக்கையில்லை என்ற ஓர் தீர்மானத்தை எடுத்தாளப்போவதாகவும், அதனைப் பற்றி ஆலோசிக்க ஓர் கூட்டம் கூட வேண்டுமெனவும், திருவாளர்கள்: கே வீ சின்னத்துரை, எஸ். பதஞ்சலி, ஆர் வி மன்மதராயன், எஸ் பி நடராசா, சாம் சபாபதி, எஸ் ஆர் தனையசிங்கம் என்பவர்கள், நகரசபைத் தலைவரைக் கேட்டனர். அக்கேள்விப்படிக்கே விஷேட கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டம் கூடியதும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பதிலாக, தலைவரின் சேவையில் சங்கம் அதிருப்தி தெரிவிக்கிறது என்பதாக மாற்ற வேண்டுமென்று திரு. மோர்ட்டிமர் கேட்டுக்கொண்டார். அத்திருத்தப் பிரேரணையை ஒப்புக்கொண்டு வாக்குச் சம்மதத்துக்கு விட்டபோது, இந்த அதிருப்தித் தீர்மானத்துக்குச் சாதகமாக 7 பேரும், பாதகமாக 5 பேரும் வாக்களித்தனர். ஆகவே தீர்மானம் நிறைவேறியது.

பட்ட அதிகாரிகட்கு அறிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சங்க நிர்வாகிகளின் தேர்தல் முடிவு பின் வருமாறு:—

தலைவர் திரு. எஸ். மண்டலநாயகம் உப தலைவர் திரு வி செல்லையா (கொக்குவில்), கௌரவ காரியதரிசி திரு. எம் என். ரஷீன் (முஸ்லிம் வார்ட்) உதவிக் காரியதரிசி திரு எஸ்.பராராஜசிங்கம் (புன்னாலைக்கட்டுவன்) பொக்கிஷதார் திரு வி. கணபதிப்பிள்ளை (இணுவில்).

யாழ்ப்பாணத்தின் ஒன்பது பிரிவுகளிலிருந்தும் தெரியப்பட்ட 14 பேர்கொண்ட [illegible]சபை ஒன்று அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் வேண்டுகோள்

(இ. சி. சொக்கநாதன்.)

சைவர்கள்-ஏன் இலங்கையில் வாழ்கின்றவர்கள் அனைவரிடமும் இப்பொழுது சமய அபிமானம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. சமய அனுட்டானங்களை மெல்லமெல்லக் கைவிட்டுக் கொண்டு வருகிறார்கள். சமய ஒழுக்குகள் வழிபாடுகள், புராணம் படித்தல, தேவாரம் ஓதுதல், நித்தியகரும விதி, விரதம் அனுட்டித்தல் இவையெல்லாம் அகராதியினின்றும் எடுபடும் தருணமா யிருக்கின்றது இப்படியே போய்க்கொண் டிருப்பதை உடனே சைவர்கள் அனைவரும் உணர்ந்து நன்கு திருந்திக் கொள்வது மிகமிக அவசியமாகும்

இப்பொழுது. நமது சமயம் முற்காலத்தில் எவ்வளவு சிறப்பாகவும் உலகமெங்கும் பரந்தும், உன்னத நிலையில் இருந்தது என்பதை உன்னிப் பாருங்கள். ஒவ்வொருவரதும் உள்ளத்தில் எவ்வளவு ஆனந்தம், எவ்வளவு பெருமை தோன்றுகின்றது. எத்தனை அடியார்கள் பெரியவர்கள் சமயத்தை வளர்த்திருக்கிறார்கள். எவ்வளவு இடையூறுகளை எங்கள் சமயம் வென்று தலை நிமிர்ந்து பெருகி யிருக்கின்றது இப்படியான பெருமைமிக்க, தன் நிகரற்ற சமயத்தில நாம் பிறப்பதற்கு என்ன புண்ணியம் செய்தோமோ? அப்படிப் பிறந்தபின் புத்தியீனமாகச் சமயக் கொள்கைகளையும், அனுட்டானங்களையும், விதிமுறைகளையும் நாம் அலட்சியம் செய்யலாமா?

ஒவ்வொரு நேர உணவு கொள்ள முன்னரும் சிவபூசை செய்தே உணவருந்தும். இராவணனின் தாயார் இருந்த இடம் அல்லவா நாம் இருக்கும் இலங்கை அந்த அம்மையார் வைத்துப் பூசித்த லிங்கம் எங்கேயென்பது எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?

பழம்பெருமை பேசிக்கொண்டு இருப்பதிற் பயனேதுமில்லை. இப்பொழுது இலங்கையில் சைவ ஆலயங்கள் எல முறைப்படி அமைந்தன நியமந்தவறாது சகல கருமங்களும் நடைபெறுவன எனக் கூறக்கூடியன எவையாவது உண்டானின் அதுகூற முடியாதிருப்பது எவ்வளவு வெட்கமா யிருக்கின்றது. எவ்வளவோ தொகையானோர்கள் பெரிய அறிவாளிகள் செல்வந்தர்கள் எல்லாரும் இருக்கும் இலங்கையில், சமய குரவர்களின் பெருமையான பாடல் பெற்ற ஸ்தலங்கள் மூன்றுக்கு மேலும் உள்ள இலங்கையில் இப்பொழுது நல்ல ஆலயம் என ஒன்றுகூட இல்லாதிருப்பது எதைக் குறிக்கின்றது? பாடல் பெற்ற ஸ்தலங்கள் எல்லாம் பாழாகவும் பிற மதத்தினர் ஆதிக்கத்திலும் இருக்கச் சைவமதத்தினர் இலங்கையில் இருக்கிறார்கள். ஏன் இருக்கிறார்கள். என்ன செய்வதற்காக இருக்கிறார்கள்.

சைவர்களே இன்பமாகவும் நாகரீகமாகவும் இருங்கள். ஆனால் உங்கள் சமயத்தை மறந்துவிடாதீர்கள் மற்றச் சமயத்தில உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பளத்தில், வருமானத்தில், ஐந்தலொருபங்கு அல்லது ஆறிலொருபங்கு சமயத்திற்காகச் செலவிடும் வழக்கம் உள்ளவர்களாக இருப்பதை உற்று உணருங்கள். நீங்களும் அப்படியாக உங்கள் வருமானத்தில் ஐந்திலொரு பங்கைச் சமயத்திற்கு அர்ப்பணஞ் செய்தல் கூடாதா? எவ்வளவு வருமானம் வந்தாலும் அவ்வளவுக்குமேல் அநேக செலவுகள் ஏற்படுகின்றன எனச் சிலர் கூறக்கூடும் செலவுகள் யாவும் எவ்வளவு அவசியமோ அவ்வளவிலும் ஆயிர மாயிரம் மடங்கு அவசியமானது சமயத்திற்காக உதவுதல். இம்மை மறுமையாகிய இரு இடத்திற்கும் பேருபகாரமானதல்லவா? நீங்கள் இம் மண்ணுலகில் இவ்வவதார மெடுத்ததற்கு அடையவேண்டிய பயன் இது வன்றி வேறெதுவெனச் சிறிது ஆலோசித்துப் பாருங்கள். மற்றைய சமயக் கோயில்களையும் அவர்கள் முன்னேற்றத்தையும் வைத்துக்கொண்டு ஒப்பிட்டால் நாம் எவ்வளவு இழிந்த நிலையி லிருக்கின்றோம். நாம் செய்யவேண்டிய எவ்வளவு கருமங்களிருக்கின்றன. நாம் அவசியம் எங்கள் பழைய பெருமை மிக்க ஆலயங்களனைத்தையும் நன்கு திருத்தியமைத்தல் வேண்டும். அவற்றை இப்பொழுதே பிற மதத்தினரிட மிருந்து பெற்று நன்னிலையிலாக்கி எல்லாரும் சென்று தரிசனமும் ஏனைய வழிபாடுகள் அநுட்டானங்கள் என்பனவுஞ்செய்யுமாறு அமைத்தல்வேண்டும். சமய அனுட்டானங்களைத் தவறவிடாது முடியுமானவரை கைக்கொள்ள வேண்டும்.

அபிமானம் மிக்க சைவமக்கள் எல்லாரும் இலங்கையில் எல்லாராலும் வியந்து மதித்துப் போற்றிப் புகழுந் தன்மைக்கு ஆலயங்களைச் சிறப்பாக்கவேண்டும் வீண் ஆடம்பரத்திலும் அனாவசியப் பொழுதுபோக்குகளிலும் எங்கள் ஆயிரக்கணக்கான பணம் வீணாவதைச் சற்று உற்று உணர்ந்து ஒவ்வொருவரும் இனியாகுதல் நல்ல வழிகளிற் செலவிட முயலல் வேண்டும். பணத்தைச் செலவு செய்யும்போது அது உண்மையில் அவசியந்தானாவென ஆலோசித்தல் மிக நன்று. மேலும் இலங்கையில் சைவமதம் இருக்கின்றது. ஆதிகாலந் தொட்டுச் சந்ததிசந்ததியாகச் சைவமதத்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என மற்றையோர் அறியக்கூடியதாக இலங்கையில் ஏதாவது அறிகுறி இருப்பதாகக் காணப்படவேயில்லை. இக்குறையை இன்னும் வைத்துக் கொண்டிருப்பது அழகல்ல உயர்தரமான கோபுரங்கள் கொண்ட கோயில்கள் பிரபலமாயுள்ள இலங்கையின் பட்டினங்கள் ஒவ்வொன்றிலும் அமைதல் வேண்டும் அதற்கு முதலில் இப்பொழுதே அவசியம் செய்ய வேண்டியது பழம்பெருமைவாய்ந்த கதிர்காமம், திருக்கேதீச்சுரம், முனீஸ்வரம், கோணேஸ்வரம் என்பனவற்றை முன்னைய பெருமைக்குக் கொணர்தல். அவற்றின் கட்டிடங்கள் புதுப்பித்து நன்கு கட்டப்பட வேண்டியன. அவையுள்ள இடங்களில் சைவசமயிகள் நெருங்கிக் குடியேறி நாலாடக்கமுஞ் சைவமணங் கமழவேண்டும். ஆற்றங்கரையிலும் அதிக வளம் செழிக்கும் பூமியிலும் அமைந்திருக்கும் அரிய பழைய புனித ஸதலங்களினருகே குடியிருத்தற்கும், நம் கைத்தொழில் முதலியன செய்தற்கும் சைவர்களிற் பெரும்பான்மையோர் விரும்புவார் வ. வீண் பேச்சுப் பேசுவதிற் காலத்தை வீணாக்காது உடனேயே காரியத்தில் இறங்கவேண்டும்.

ஆனபடியால் சைவர்களே உங்கள் சமயத்திற்காக எவ்வகையான உதவியையும் உற்சாகத்துடன் செய்வதற்கு ஊக்கமடையுங்கள். உங்கள் முன்னோர் எவ்வாறு சமயத்தை வளர்த்தார்களோ அதேபோன்று நீங்களும் வளர்த்துச் செழிப்படையச் செய்யுங்கள்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

---

## சமயம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும். அவ்வாறு முதல் உரிமையாகக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் சைவ மக்கள் இருக்கக்கூடாதா? பலவிதமான கொடிய துன்பங்களை இயற்றி அவர்களை வெளியேற்ற விடுவது சரியா? அதை நமது அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறதே.

**மற்றொரு அவமானம்**

இந்தியா என்பது நம் நாட்டிற்கு உள்ள வழக்கப்பெயர். சரித ஆசிரியர்கள் இப்பெயர் சிந்து நாடடிலிருந்து வந்ததென்பர். இப்போது சிந்து நாடு இந்தியாவிலில்லை. ஆகவே தமது நாட்டிற்கும் தமது சமயத்திற்கும் பெயரைத் தந்த மாகாணம் அதில் ஓடும் ஜீவநதி இவைகளை விட்டுக்கொடுத்துவிட்டு அந்தப் பெயரைமாத்திரம வகித்துக்கொண்டிருப்பது வெட்கக்கேடு அல்லவா? இதனை இந்துக்கள் என்று கூறிக்கொள்பவர் எவரேனும் சிந்திக்கிறார்களா?

இது எப்படிப் போனாலென்ன, சைவ நிலையத்திற்கு மூலத்தானமாக இருந்த சிந்துநதிப் பள்ளத்தாக்கை நாம புறக்கணிப்பது சரியா என்று நேயர்கள்சிந்தனைக்குவிடலாமல்லவா,

—[illegible]

# திருச்சி ரேடியோ

புதன் பிப்ரவரி 25

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் கே பாலகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ஆர் ஆர் கேசவமூர்த்தி வயலின் 8 30 தஞ்சாவூர் ஜானகிஅம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 தஞ்சாவூர் ஜானகிஅம்மாள் பாட்டு 2 தமிழில செய்திகள் 2 05 தஞ்சாவூர் ஜானகியம்மாள் பாட்டு 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 எம் கே பாலகிருஷ்ணன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி. 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 ராணுவத்திலிருந்து செய்திகள் 7 30 தமிழில்செய்திகள் 7 45 புதிய வெளியீடுகள் 8 கனவில் கண்ட காதலன் நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வி வேணுகோபால் கிளாரினெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் பிப்ரவரி 26

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே பத்மநாபன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 டி பி எ முத்துக்குமாரசுவாமி வீணை 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 ஒடப்பாட்டுகள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கே பத்மநாபன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 செய்திவிளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 ஸ்ரீ வைகுண்டம் எஸ் பரமசிவம் பிள்ளை பாட்டு 8 15 டி கே பட்டம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 இருகுரலிசை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 டி பி எ முத்துகுமாரசாமி வீணை 10 0 முடிவு

வெள்ளி பிப்ரவரி 27

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் கே ரங்கய்யபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எஸ் தர்மாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் கே ரங்கய்ய பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் தர்மாம்பாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 3 முடிவு.

மாலை 5 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 5 40 குரான் ஷரீப்விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 7 30 தமிழில செய்திகள் 7 45 நமது தபால் பெட்டி 8 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 8 30 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குர்ஷித் இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

## பதவி ஏற்குமா

3-ம் பக்கத் தொடர்ச்சி

சபையில் இடம்பெறுவதுபற்றிஇப்போது அதிகமாகப் பேசப்படுகிறது ஆனால் இதுவரை திரு செனநாயக்கா இவ்விஷயமாக தமிழ்க் காங்கிரஸ் அதிகாரபீடத்துடன் நேருக்குநேர் பேசாவிட்டாலும், மந்திரசபையில் இனி எதும் இடங்கள் காலியாகுமானால், அப்படிக் காலியாகும் இடங்களைத் தமிழ்க்காங்கிரஸ்கட்சிக்குக் கொடுக்க திரு செனநாயக்கா தயாராகவிருக்கின்றாராம். காங்கிரஸ் வாதிகளும், செனநாயக்காக் கட்சியின நம் இதுவரை இது பற்றி மவுனம்சாதித்தாலும், இரண்டுதரப்பிலும் சமாச மனப்பான்மை நிலவுகிறது.

'திரு. செனநாயக்கா கொடிப்பிரச்சினை பற்றி வந்த முடிவுக்காக திரு. பொன்னம்பலம் திருப்தியுற்றிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.'

---


# சமயகுரவர் சந்தானகுரவர்

[சரித்திரச் சுருக்கம்]

*

இந்நூல் தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. (S. S. C.) மாணவர்கட்குச் சைவசமயப் பாடங்களை ஒன்றாக விதிக்கப்பெற்றுள்ளது.

விலை 75 சதம் (12 அணா)

மனேஜர்,

வண்ணார்பண்ணை, 20—2—48.

யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை.


### நொண்டமானாறு செல்வச்சந்நிதி ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானின் மகோற்சவம்

நிகழும் சர்வசித்து வருஷம் மாசிமாதம் 20-ந் திகதி 3—3—48) புதன்கிழமை காலை 11 மணியளவில் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும், பராசக்திகளுக்கும் (1003 இராமேஸ்வரச் சங்குகளாலும் 11 வலம்புரிகளாலும்) சகஸ்ர மகாசங்காபிஷேகமும், அன்னாபிஷேகமும் சந்தனாபிஷேகமும் நடைபெறும். அன்று மாலை 6 மணியளவில் பல அபிமானிகளால் சங்காபிஷேக மகிமை என்னும் விஷயம்பற்றிச் சிறந்த பக்கவாத்தியங்களோடும் இன்னிசைப் பாடல்களோடும் உபந்நியாசங்கள் நடைபெறும். அன்றிரவு 9 மணியளவில் வெற்றிவேலாயுதப் பெருமான் வீதிவலம் வருவர்.

—கடித.


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

•

அப்படியானல்

•

இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விக்க வந்த காந்தி

## அவர்வழி நின்று அரும்பணியாற்றுக

(“தில்லைச்சிவன்”, சரவணை)

சத்தியத்தின் தந்தை, அகிம்சா மூர்த்தி காந்தி இன்று அமரராகினர். அவரது ஆத்மா உடலை விட்டகன்று விட்டது. அவருக்காக உலகெலாம் அநுதாபப்படுகின்றது. ஆலயங்கள் எழுப்பத் திட்டம் போடுகின்றார்கள். அவருடைய உருவச் சிலைகள் பல்வேறு இடங்களில் நாட்டப்பட்டு வருகின்றன. ஆயின் இவைகளால் மட்டும் நாங்கள் திருப்தியடைந்து விடமுடியாது. காந்திஜி உயிருடன் இருக்கும்பொழுதே தனக்குக் கற்சிலை செய்வதையும், ஆலயங்கள் எழுப்புவதையுங் கண்டு அதிருப்தி அடைந்தார். இவைகளில் அவருடைய ஆத்மா சாந்தி அடையாது.

மகாத்மாவின் ஞாபகத்தின் பொருட்டு எந்த ஒரு வறியவனும் செய்யக்கூடியவழிகள் பல இருக்கின்றன. அதனால்தான அவர் இன்புறுவார்-அவருடைய புண்ணியஆத்மா சாந்தியடையும் மகாத்மா எந்த லட்சியத்துக்காக உழைத்தாரோ அந்த லட்சியத்துக்காக உழைக்கவேண்டும் அதுவே அவருக்குப்போதுமானது. சாந்தியளிப்பது.

உலக சமாதான தூதுவராகிய மகாத்மா எந்த லட்சியத்துக்காகப் பிறந்தாரோ அந்த லட்சியத்துக்காகத்தான் உயிர் துறந்தார். அவருடைய அகிம்சை உலகை உய்விக்க வந்த சஞ்சீவி. மனிதப்வர்க்கத்திடையே பிறந்த மாணிக்கமான மகாத்மா செத்தும் சிரஞ்சீவியாக இருக்கிறார். அவருடைய போதனைகள் உலகுக்கு ஒளிகொடுக்க வந்த மணி விளக்குகளாக இருக்கின்றன.

காந்தி ஒரு மனிதனல்ல! அவர் ஓர் மாபெருந்தெய்வம். அவருடைய கொள்கை லட்சியம் நோக்கம எல்லாம்பண்பாடானவை உலகை வாழ்விப்பன, புத்தர், யேசுநாதருடைய போதனைகளுக்கு மேம்பட்டன. கீதையின் பாதை கொணடது.

உலகத்தில் இது ஒரு புதயுகம்; ‘காந்தியுகம்”; அகிம்சையின் வெற்றி கண்ட யுகம். சத்தியப்போர் செய்த யுகம். இந்த யுகத்தில் நாங்கள் பிறந்தோம் என்பதற்காக மகிழ்ச்சியடையவேண்டும். ஆயின் அதே நேரத்தில் காந்தியின் மறைவு - பரிதாபமான மறைவு எங்களை வாட்டுகின்றது

அவர் அமரரானார். அவரைத் தொழுகின்றோம். அவர் நெறி நின்று அஞ்சலி செய்கிறோம். அவரது அகிம்சை எங்களை ஆள்கின்றது. அவரது பொக்கைவாய்ப் புன்முறுவலை-அருள் வழிந்தோடும் அன்பன விழிகளை, ஒவ்வொரு மூச்சும் “சத்திய”மாகவே வெளிவிடும் நாசியை - நாங்கள் காணவில்லை அவரது அன்பானமணி மொழிகளைநாங்கள் இப்போதுகேட்கவில்லை. ஆயின் அவரது எழில் உருவம் அன்புருவம் எங்களை ஆசிர்வதிக்கின்றது. அவர் தந்த சுதந்திரக் கொடி நிழலில் நாங்கள் வாழ்கின்றோம். அவர் அகிம்சைக் கற்கள் அடுக்கிக் கட்டிய அரண் எங்களைக் காவல்புரிகின்றது. அவர் அமரரானார்.

“வாழ்க மகாத்மா”
“வாழ்க காந்தியம்”

# கந்தபுராணக் கவிநுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இனையன வழுத்திக் கூறி யிலங்கெழிற்குமர மூர்த்தி
தனதுபே ருவை நோக்கிச் சதமகன் முதலா வுள்ளோர்
தினகரன் மலர்ச்சி கண்ட சில்லுணர் வுயிர்களென்ன
மனமிக வெருவக் கண்க ளலமர் மயங்கிச் சொல்வார்.

இந்திரன் முதலான தேவர்கள் இந்தப் பிரகாரம் வணங்கித் துதித்து, விளங்குகின்ற திருவருளோடு கூடிய குமாரக்கடவுள் கொண்ட திருப்பெருவடிவத்தைத் தரிசித்து, சூரியனுடைய ஒளியைப் பார்த்த சிற்றறிவுடைய உயிர்களைப் போல உள்ளம் அஞ்சிக் கண்கள் சுழலப்பெற்றவராய் மயக்கங்கொண்டு (பின்வருமாறு) விண்ணப்பஞ் செய்வாராயினர் என்பது கருத்து.

சதமகன்-நூறு யாகங்களைச் செய்து பதவி பெற்றவனாகிய இந்திரன்; தினகரன்-நாளினை ஆக்குபவனாகிய சூரியன்; இனையவை யென்றது மேலேயுள்ள திருவிருத்தங்களிற் கூறப்பட்டவை; சில்லுணர்வுயிர்களென்றது ஐவறிவு நாலறிவுகளையுடைய புழு முதலியவைகள்; ஆந்தைபோன்ற சில பிராணிகள் சூரியவொளியைக் கண்டு தம கண்கூசி வருத்தப்படுதல்போல வெனினுமாம. மக்களே சூரியனை நேரில் நோக்கக் கூசுதல் இயல்பென்க; சூரியனுடைய ஒளி முகிற்படலத்தாற் சிற்சில சமயம் மறைப்புண்ணும்போது, அதனை நோக்குதல் சாலுமெனினும், எவ்வகையான மறைப்புமின்றி உதயஞ்செய்து சிலநாழிகைபோஞ் சென்றபின் பூரண ஒளியோடு விளங்கும்போது அச்சூரியனை நோக்குதல் இயலாதாதலின் தினகரன் உதயங்கண்ட எனக் கூறாது, “தினகரன் மலர்ச்சி கண்ட” எனக் கூறினர். இந்திரன் முதலாந் தேவர்கள் முருகக்கடவுள் கொண்ட திருப்பெருவடிவத்தை நீடித்தநேரம் பூரணமாகத் தரிசித்தற்கு இயலாமற் போனமைக்குக் காரணம் அவர்களிடத்திற் போதிய தவப்பேறின்மையே யாகும்; இதனைச் சூரபன்வதைப் படலத்திற் சூரபன்மனுடைய வாக்காகக் கூறப்படும் பின்வரும் திருவிருத்தத்தாலுணர்க:

நேரிலனாகி யீண்டே நின்றிடு முதல்வன் நீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதும் அச்சுறுவதல்லால்
ஆரிது நின்று காண்பார் அமரரில் அழிவிலாத
சீரிய வரங்கொண் டுள்ளேனாதலிற் றெரிகின்றேனால்.

தமக்கு ஒப்பாரும் மிக்காருமிலாதவராகிய இச்சிவகுமாரர் கொண்டு நின்றுள்ள இந்தத் திருப்பெருவடிவத்தைப் பார்த்துத் தேவர்களெவரும் அச்சமடைவார்களேயொழிய எவர் நேர்நின்று தரிசிக்கவல்லவர்; (சூரனாகிய) நான் பரமசிவனிடத்திற் சிறந்த வரங்களைப் பெற்றுளேனாதலின் இத்திருப்பெருவடிவத்தைத் தரிசிக்கும் பேற்றைப் பெற்றேனென்பது பொருள். (101)

எல்லையி லொளிபெற்றன்றால் எந்தைநின் னுருவ மின்னும்
ஒல்லுவ தன்றாற் காண வொளியிழந் துலைந்த கண்கள்
அல்லதும் பெருமைநோக்கி யஞ்சுதும் அடிய முய்யத்
தொல்லையி னுருவங்கொண்டு தோன்றியே யளித்தி யென்றார்.

எங்கள் பரமபிதாவே! தேவரீர் கொண்டுள்ள இத்திருப்பெருவடிவமெனிலோ எல்லை கடந்த ஒளியோடு கூடியது, (அதனால்) இன்னும் அற்பநேரமேனுந் தரிசிக்க இயலாது, தரிசித்தமாத்திரத்தே கண்கள் ஒளிகெட்டுச் சுழலுகின்றன, அதுவன்றியும் தேவரீர் கொண்டுள்ள திருவடிவத்தின் பாரிய தோற்றத்தைக் கண்டு பயப்படுகின்றோம், தேவரீருடைய அடியவர்களாகிய நாங்கள் ஈடேறும் வண்ணம் பழைய பாலசுப்பிரமணியத் திருக்கோலத்தையே காட்டியருளுதல் வேண்டும என்த் தேவர்கள் வேண்டினார்கள் என்பது கருத்து.

இத்திருவுருவத்தின் பேரொளியானது எங்கள் கண்ணொளியைக் கெடுக்கின்றது; இதன் பாரிய தோற்றம் எங்கள் உள்ளத்தை அச்சுறுத்துகின்றது, அதனால் இத்திருப்பெருவடிவத்தின் தோற்றத்தைத் தவிர்த்து, பழைய பாலசுப்பிரமணியத் திருக்கோலத்தையே காட்டியருள்க என இந்திரன் முதலிய தேவர்கள் முருகக் கடவுளை இரந்தவாறும். (102)

என்றிவை புகன்று வேண்ட எம்பிரான் அருளால் வான்போய்
நின்றபே ருருவந் தன்னை நீத்தறுமுகத் தோனாகித்
தோன்றுத வழுவத் தோடு தானவலுந் தொழுதுபோற்றிக்
குன்றருஞ் சிறைக ளீர்ந்த கொற்றவன் கூறலுற்றான்.

என்று இவ்வாறு விண்ணப்பஞ்செய்து இரந்துநிற்ப, எங்கள் கடவுளாகிய முருகமூர்த்தி அத்தேவர்கள்மேல் வைத்த கருணையினால், ஆகாய வெல்லையையும் கடந்து விளங்கிய அத்திருப்பெரு வடிவத்தை மாற்றி, பழையபடி சண்முக மூர்த்தியாகக் காட்சி கொடுத்தலும், (அதனைத் தரிசித்த) இந்திரன் வணங்கித் துதித்துப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்வானாயினன் என்பது கருத்து.

மலைகளுட் சில உயிருடையனவாய்ச் சஞ்சரிக்கு மியல்பினவாய்ச் சிறகோடு கூடியனவாயிருந்தன வென்பதும், அவற்றின் சிறகை இந்திரன் அரிந்தபின்னரே அவைகள் அசலமாயின வென்பதும் கதையாதலின் இந்திரனைக் குன்றருஞ் சிறையரிந்தோன் எனச் சொல்வர். கொற்றவன்-வெற்றியோடு கூடியவன், அரசன்; இத்திருவிருத்தமும் அவனருளாலே அவனருள் வணங்கவேண்டு மென்பதை வற்புறுத்துவதாரும். (103)

# பாரதூரமான குற்றச்சாட்டுகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

டிற்கு அரைத்தூரம் வரை கல்விட்டுப் பின் நிறுத்திவிட்டீர்; உமதுநிர்வாகத்தில பலவீனம் இருக்கிறபடியால் வேலைகள் செய்விக்கும் பலர் கைலஞ்சத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள் என்று பல புகார்கள் கூறப்படுகின்றன.

“ஒரு மாதத்திற்கு முன்பு இந்தவேலைப் பகுதியில் ஒருவருக்கு நூற்றைம்பது ரூபாச் ‘செக்’ கைலஞ்சமாக வழக்கப்பட்டதாக எனக்கு முறைப்பாடுகள் சொல்லப்பட்டன.

தொடர்ந்து சுகாதாரப்பகுதியை யிட்டு திரு. சின்னத்துரை கூறியதாவது:—

சபையின் சுகாதாரப் பரிசோதர்கள் என்ன செய்கிறார்களென்பது எனக்குத் தெரியவில்லை. உமது கந்தோரில் சபையின் காரியதரிசி, சுகாதார டாக்டர் பலசார அதிகாரி ஆகிய இவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் யாவரும் எவலாளிகள்கூடக் கைலஞ்சம் வாங்குவதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இனி எங்களால் பொறுக்கமுடியாது. எனது முன்னால் உமது கந்தோரிலுள்ள இரசொடு கிளாக்மார்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொண்டார்கள். நான் உம்மை அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி சொன்னேன். நீர் சும்மா இருந்துவிட்டீர்.

திரு. சாம். ஏ. சபாபதி குறிப்பிட்டதாவது:—‘பொதுவாழ்வு சுத்தமாக இருக்கவேண்டு மென்பதில்தான் எனக்கு கவலை. தலைவராகிய திரு. பொன்னம்பலம் நகாசபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் தம்பக்கமாக இருக்கின்றார்களென்ற நம்பிக்கையை வைத்திருப்பதால பொதுஜன அபிப்பிராயத்தை மீறி நடக்கலாமென்று நினைத்திருக்கிறார்.

“திரு. பொன்னம்பலத்தின் சீர்கேடான நிர்வாகத்திற்கு எதிராக எனது குரலைக் கேட்கச்செய்யாவிட்டால் நான் இந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ளவர்களுக்குத் துரோகஞ் செய்தவனாவேன்

‘மின்சார விநியோகத்திற்கு வரும் மனுக்களைத் திரு பொன்னம்பலம் நடத்தும் விதம் அவதூறானதாகும், ‘பிளாக் மார்க்கெற்” வியாபாரிகள் ரோட்டில் இருந்து 25 அடிக்குள் பெரும்மாளிகைகளும்மதில்களும் கட்டுகிறார்கள். சபையின் வீடு கட்டும் சட்டம் எங்கே? திரு பொன்னம்பலம் அச்சட்டங்களை மதிக்கிறாரா? செம்மாதெருவில் குளத்தின் எல்லையை மீறக்கூடிய விதத்தில வீடுகட்ட இடங்கொடுத்திருக்கிறார் திரு பொன்னம்பலம் இது முறையா?

இச்சபையின் ஒரு சில அங்கத்தவர்களின் உதவியைக்கொண்டு திரு பொன்னம்பலம் இச்சபையைத் தனது காலின் கீழுள்ள தாசாக மதிப்பிடுகின்றார்.

“நீர் உமது முறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் நான் இச்சபையிலிருந்து விலகிக்கொள்வேன்”

தலைவர் திரு. பொன்னம்பலம் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பலமாக மறுத்தார். ஆனால் மின்சார விநியோக மனுக்கள் சம்பந்தமாகப் பல பிழைகள் செய்திருந்ததாக ஒப்புக்கொண்டார்,

‘அப்பிழைகளை நான் செய்தது சபையின் சில அங்கத்தவர்களின் மூகத்தாட்சண்யத்தினாற்றான்’’ என்றும் திரு. பொன்னம்பலம் கூறினார்.

இதைவிட வேறு குற்றச்சாட்டுகளுக்கு “நான் நிரபராதி” என்றார் திரு. பொன்னம்பலம்.

# பதவியிழந்தார்

## திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வா

கண்டித்தொகுதி அங்கத்தவராய்த் தெரிவுசெய்யப்பட்டுப் பின் கைத்தொழிற் குதி மந்திரியாக இருக்கும் திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வாவின் தேர்தல் மனு வழக்கு முடிவு இன்று அறிவிக்கப்பட்டது. அதன்படி திரு. சில்வா தம் பாராளுமன்றத்தின் ஸ்தானத்தைஇழந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிந்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம் இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Std 14 20-11-46—20-11-7 (தி)



# நாதன்ஸ் பிரயாணம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினுங் ரூபா 170
" நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6 6-48.



யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார்

# வெளியிட்ட பாலபாடங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| சிறுபிள்ளைப்பாடம் | (சித்திரசகிதமானது) | — 35 |
| முதற் பாலபாடம் | " | — 35 |
| இரண்டாம் பாலபாடம் | " | — 50 |
| மூன்றும் பாலபாடம் | " | — 60 |
| நான்காம் " | " | — 80 |
| (A) இலக்கியவாசகம் மூன்றும் புத்தகம் | | — 60 |

[நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது; புதுக்கிய இரண்டாம் பதிப்பு: அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு: செய்யுட்பாகம்; பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதை, நீதிக்கவித் திரட்டு (சித்திரமில்லை)

| | | |
|---|---|---|
| ஐந்தாம் பாலபாடம் | " | — 80 |

[இரண்டாம் பாலபாடந் தொடக்கம் ஐந்தாம் பாலபாடம் வரையுள்ள நான்கு பாலபாடங்களிலும் முன்னருள்ள பாடங்கள், அரும்பதவிளக்கம் செய்யுட்பாடவுரை என்னு மிவைகளுடன், ஒவ்வொரு பாடங்களின் இறுதியிலும் வினக்கள் இலக்கணக்குறிப்பு அப்பியாசம் என்னுமிவைகளும் புதியனவாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.]

| | | |
|---|---|---|
| ஆறும் பாலபாடம் (பதுக்கியபதிப்பு) | | — 90 |
| ஏழாம் " | " | — 90 |
| எட்டாம் " | " | 1 00 |

[இப் பாலபாடங்கள் பத்தும் இலங்கை வித்தியாதிகாரியின் அங்கீகாரம் பெற்றுள்ளன; வித்தியாபகுதியாரின் நிபந்தனைகட்கமையத் தொகுக்கப்பெற்றன. தனித்தனி பல பதிப்புக்களை யடைந்துள்ளன. உயர்ந்த கிளேஸ் காகிதத்திற் பெரிய அட்சரங்களில் தெளிவுற அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டுள்ளன யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவ வித்தியாசாலைகளிலும் அரசினர்பாடசாலைகளிலும் உவந்தேற்று உபயோகிக்கப்படுவன எல்லா வகுப்பிலும் சபையார் பாலபாடத்தை உபயோகிக்கும் வித்தியாசாலைகட்கு இந்துசாதனப்பத்திரிகை, பாதிக்கிரயம் மாத்திரம் பெற்றுக்கொண்டு கிரமமாக அனுப்பப்படுகின்றது]

மனேஜர்



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி சிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெர்ப்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | " | 3, 000, 000, 00 |
| சேமநிதி | " | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std. 7-8 29 1-8—30-4


வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday, February 24 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org